**03.04.2025**

**C.C. No. 63/2024**
**எ.சா. 1 சாந்தி**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) எனது கணவர் பெயர் வீரக்குமார். என் கணவர் பால் சீலிங் வேலை செய்து வருகிறார். எனக்கு தமிழ் எழுதப்படிக்க நன்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 9 முதல் ம.சா.ஆ. 11 வரையான வழக்கறிஞர் அறிவிப்புகள் எனது முகவரிக்கு அனுப்பப்பட்டதுதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள பெறுநர் முகவரி எனது முகவரிதான். மேற்படி ம.சா.ஆ. 9 முதல் ம.சா.ஆ.11 வரையான அறிவிப்புகளை என் கணவர்தான் வாங்கியிருக்கிறார். நான் வாங்கவில்லை. அறிவிப்பில் உள்ள புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரை தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டேனா என்றால் என் மகள் சொல்லி தொடர்பு கொண்டு பேசினேன். வழக்கறிஞர் அறிவிப்பு வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 2 ஆவணத்தில் உள்ள இணைக்கப்பட்டுள்ள ஆவனத்தில் எனது மற்றும் என் கணவரின் ஆதார் நகல் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ. 2 ஆவணமான கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ள கையொப்பமும், ரேகையும் என்னுடையது என்றால் சரியல்ல. ஆதார் அட்டை மற்றும் காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது. கடனுறுதிசீட்டில் நான் எந்த கையொப்பமும் செய்யவில்லை.

2) நான் நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு மனு தாக்கல் செய்து நீதிமன்ற ஆவணங்களை பார்வையிடவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் பார்க்க தயாரில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கடனுறுதிசீட்டில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என் கணவருடையது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் என் கணவருக்கும் எனக்கும் பிரச்சனை சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. இரவு 03.00 மணியளவில் புகார் அளிக்க சென்றபோது காவல்நிலையத்தில் காலையில் வரும்படி கூறியதாலும், வேறு யாரும் எனக்கு

உறுதுணையாக இல்லாத காரணத்தாலும் நான் மீண்டும் காவல் நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை.இவ்வழக்கு நடப்பதால் காவல் நிலையம் சென்று நான் அலைய முடியாது என்று செல்லவில்லை. மேற்படி நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

3) பொதுவாக பொதுமக்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் அவசர போலீஸ் 100 என்ற எண்ணை தொடர்பு கொள்வார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற முதல் கேள்வி மற்றும் 313 crpc கேள்வியில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி இரண்டு ஆவணத்திலும் உள்ள கையொப்பம் வேறுபட்டு உள்ளது என்றால் சரிதான். காசோலைகளில் S.P.சாந்தி என்று கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற கேள்விகளில் V. சாந்தி என்று கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சூழ்நிலைக்கு தகுந்தவாறு கையொப்பத்தை மாற்றி செய்யும் பழக்கம் உள்ளவர் என்றால் சரியல்ல. என் வங்கி கணக்கில் என் தந்தையின் பெயரை முதல் எழுத்தாக ( Initial) கொண்டு கையொப்பம் செய்துள்ளேன். தற்போது வரை வங்கி சம்பந்தமான ஆவணங்களில் அவ்வாறுதான் கையொப்பம் செய்து வருகிறேன்.

4) நான் புகார்தாரரை ஏமாற்றி மோசம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் கையொப்பங்களை மாற்றி மாற்றி செய்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் அவர் சாட்சி சொல்லமாட்டார். அவர் என்னுடன் இல்லை. புகார்தாரருடன் இருப்பதால் எனக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வரமாட்டார். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரை புகார்தாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. புகார்தாரர் சொல்வதுபோல் நான் காசோலை தொகைகளை செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. நான் நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் நான் காவல் நிலையத்திற்கு சென்று காசோலை மோசடி பற்றி வழக்கு கொடுத்தேனா என்றால் இல்லை வழக்கு நீதிமன்றத்தில் நடைபெறும்போது காவல் நிலையத்திற்கு செல்ல கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

5) நான் காசோலை தொகையை கொடுக்க கடமைபட்டவர் என்பதால்தான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.  நான் பொய்கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர்  அறிவிப்பிற்கு ஏன் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் தபாலில் உள்ள முகவரியை மட்டும் புகைப்படம் எடுத்து என் மகள் எனக்கு அனுப்பியிருந்தார் அதனால்தான் நான் புகார்தாரர் அறிவிப்பிற்கு பதில் அனுப்பவில்லை. அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது.  வழக்கறிஞர் அறிவிப்பின் முழு விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.  நான் எனது குடும்ப தேவைக்காகவும், தொழில் தேவைக்காகவும் பெற்ற கடனை திரும்ப செலுத்தவில்லை என்றால் சரியல்ல.  நான் புகார்தாரரை ஏமாற்றும் நோக்கில் முன்னுக்குபின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  புகார்தாரரை  ஏமாற்றும் நோக்கில் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி